ஆசிரியர் பணி அறப்பணி

# தமிழ்நாடு அரசு உதவி பெறும்
# சிறுபான்மையற்ற பள்ளிகளின் ஆசிரியர்கள் கூட்டமைப்பு

(ஆசிரியர் தகுதித் தேர்வு நிபந்தனை ஆசிரியர்களுக்கான அமைப்பு)

தலைமையகம் : 1 A/3, சிட்டி கம்யூட்டர்ஸ் வளாகம், ஸ்ரீ ஷாப்பிங் காம்ப்ளக்ஸ், அண்ணா நகர் 2வது கிழக்கு மெயின் ரோடு, மதுரை - 625 020.

மாநில ஒருங்கிணைப்பாளர்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| A. சந்திரன்<br>77085 82806<br>கோவை | ★ | S. பூபதி<br>96291 47306<br>திருச்சி | ★ | K. சிவஞானம்<br>99442 46797<br>மதுரை |


07.08.2022

## சொல்லத் தவித்திடும்
## "ஆசிரியர் மனசு"

**அனுப்புநர்:**

சி. ஜெயராமன்,
No: 24, கோனார் காம்பவுண்ட்,
ஜெய்ஹிந்த்புரம் மெயின் ரோடு
ஜீவநகர், மதுரை - 06.

**பெறுநர்:**

**மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்கள்,**
**தமிழ்நாடு அரசு, சென்னை.**

**பொருள்:** **"விடுகதையா(ன) எங்கள் வாழ்க்கை...விடை தருவார் மாண்புமிகு முதல்வர் என்ற ஒற்றை நம்பிக்கையுடன் கடந்த 11 ஆண்டுகளாக காத்திருக்கும் ஆயிரக்கணக்கான அரசு உதவி பெறும் சிறுபான்மையற்ற பள்ளிகளில் நிரந்தரப் பணியிடத்து தகுதித்தேர்வு நிபந்தனை ஆசிரியர்களின் சொல்லத் தவித்திடும் மனசு"**

**பசி நோக்கார், கண் துஞ்சார் செயல்களே கண்ணாயிருந்து செயலாற்றி அரசை வழிநடத்தி ஓராண்டினை சிறப்பாக நிறைவு செய்துள்ள மாண்புமிகு தமிழக முதல்வருக்கும், தமிழக அரசுக்கும் எங்களது வாழ்த்துக்கள்.**

**தமிழக பள்ளிக்கல்வித்துறைக்குப் பொருத்தமான அமைச்சராகத் திகழும் மாண்புமிகு அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யா மொழி அவர்களின் துறை சார்ந்த புதிய சிந்தனைகளோடு சீரிய செயல்பாடுகளுக்கும் மனம் நிறைந்த பாராட்டுக்கள்.**

**வணக்கம்.**

- 2012-ம் ஆண்டில் தமிழகத்தில் ஆசிரியர் காலிப்பணியிடங்கள் நிரப்புதல் தொடர்பாக பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் செயல்முறைகள் (ந.க.எண் 88573/டி/1/இ4/2012) ஆணையின் படி 16.11.2012 வரை அரசு உதவி பெறும் சிறுபான்மையற்ற (Non-Minority)

பள்ளிகளில் முறையாக பணி நியமனம் பெற்ற சுமார் 1000 ஆசிரியர்கள் மட்டும் தகுதித் தேர்வு நிபந்தனையால் இன்று வரை பாதிப்புக்கு உள்ளாகி மிகுந்த மன வேதனையுடன் கடந்த 10 ஆண்டுகளாக பணி செய்து வருகின்றோம்.

- எங்களைப் போலவே 2012 வரை தகுதித் தேர்வு நிபந்தனையுடன் பணியேற்ற அரசுப் பள்ளி (Govt. schools) ஆசிரியர்கள் பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் (ந.க.எண்19850/சி/5/இ2/2014, நாள்:08.11.2017) மூலம் காப்பாற்றப்பட்டு விட்டனர்.

- அதே போல அரசு உதவி பெறும் சிறுபான்மைப் (Minority) பள்ளி ஆசிரியர்களுக்கு பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் செயல்முறைகள் (ந.க.எண் 3416/டி1/01.03.2013) மூலம் தகுதித்தேர்வு நிபந்தனையை ரத்து செய்து இவர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி மட்டும் அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டதால் தகுதித் தேர்விலிருந்து இவர்களும் விலக்குப் பெற்று தற்போது வரை அனைத்து சலுகைகளையும் தடையின்றி பெற்று வருகின்றனர்.

- ஆனால் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெறாத சிறுபான்மையற்ற ஆசிரியர்களாகிய (Non-Minority) எங்களுக்கு ஒரு வார கால புத்தாக்கப் பயிற்சி மட்டும் அளிக்கப்பட்டு பாதுகாக்கப்படுவார்கள் என கடந்த ஆட்சியில் துறைசார்ந்த அமைச்சர் கடந்த 2019-ம் ஆண்டே பத்திரிகைகள் வாயிலாக உறுதியளித்திருந்தார். ஆனால் கடைசி வரை அந்த அமைச்சரும், துறை அதிகாரிகளும் இவ்விஷயத்தில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து எங்களது பணியை காப்பாற்றிக் கொள்ளும் நிலைக்குத் தான் தள்ளப்பட்டோம்.

- தமிழகத்தில் ஆசிரியர் தகுதித் தேர்வு நடைமுறைகள் அமலாகுவதற்கு முன்பாகவே ஏற்கனவே, பல ஆண்டுகளாக அமலில் உள்ள கல்வித்துறையின் உரிய நடைமுறைகளான, அரசின் வழிகாட்டுதலுடனும், அந்தந்த மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலக பதிவுப் பட்டியல் பெற்றும், நாளிதழ்களில் விளம்பரம், கல்வித்துறையின் அங்கீகாரம் பெற்ற பள்ளிக் குழுவின் நேர்முகத் தேர்வு, இனச்சுழற்சி (Roster) முறை கடைப்பிடிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் முறையாக தேர்வு பெற்று, பள்ளிக் கல்வித் துறையின் ஒப்புதலுடன் தமிழகம் முழுவதும் அரசு உதவி பெறும் சிறுபான்மையற்ற பள்ளிகளில் பணியாற்றி வருகின்றோம்.

- தற்போதுள்ள நடைமுறைப்படி, எங்களுக்குப் புதிதாக சான்றிதழ் சரி பார்ப்பு மற்றும் புதிய பணியிடம் உருவாக்க வேண்டிய தேவையும் இருக்கப் போவதில்லை. இதனால் நிதித்துறை சார்ந்த சுமையும் அரசுக்கு இல்லை என்பதையும் தங்களது மேலான கவனத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறோம். மொத்தத்தில், நிம்மதியை முழுவதுமாகத் தொலைத்துவிட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கருணைப் பார்வை ஒன்றை மட்டுமே முழுமையாக நம்பி ஏக்கத்தில், மிகுந்த மன உளைச்சலோடு பணியாற்றி வருகின்றோம்.

- ஆசிரியர் தகுதித் தேர்வு ஒன்றை மட்டுமே காரணம் காட்டி, இதுநாள் வரை எங்களுக்குக் கிடைக்க வேண்டிய பதவி உயர்வு, வளரூதியம், ஊக்க ஊதியம், ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு, பணிப்பதிவேடு தொடக்கம், பிரசவ விடுப்பு அனுமதிப்பு, தகுதி காண் பருவம்

நிறைவேற்றல், பணிவரண்முறை செய்தல் போன்ற வழக்கமான நடைமுறைகள் கூட அனுமதிக்கப்படாமல் மிகுந்த வேதனையில் உள்ளோம். சிலர் பணி ஓய்வு பெறும் வயதை நெருங்கியுள்ளனர்.

- கடந்த ஆட்சியாளர்களால், புரிதல் இல்லாத துறை சார்ந்த ஒரு சில அதிகாரிகளால் எங்களின் வாழ்வாதாரம் பாதிப்புக்கு உள்ளாகியது. 2010-ல் தி.மு.க கழக ஆட்சி இருந்து போது அரசு வழக்கறிஞராக இருந்த மூத்த வழக்கறிஞர் சென்னை திரு G. சங்கரன் அவர்களின் பெரும் துணையோடு தான் உயர்நீதி மன்றம் வரை படியேறி பணிப்பாதுகாப்புக்கான தடையாணை பெற்று எங்களது பணியை தொடர்ந்து வருகின்றோம். கழகத்திற்காக உழைத்தவர்கள், மாண்புமிகு தளபதியார் அவர்களின் தலைமையில் ஆட்சி அமைய பாடுபட்டவர்களின் குடும்பத்தை சார்ந்தவர்களும் இப்பிரச்னையால் பாதிக்கப்பட்டுள்ளவர்களில் அடங்குவர்.

- மொத்தத்தில், மிகுந்த மன உளைச்சலுடன் வாழ்வா, சாவா என்ற வாழ்க்கைப் போராட்டத்துடன் நாள்களை நகர்த்திக் கொண்டிருக்கும் ஆசிரியர் தகுதித்தேர்வு என்ற நிபந்தனையின் அடிப்படையில் பணிபுரியும் எங்களுக்கும் ஆசிரியர் தகுதித் தேர்விலிருந்து விலக்கு அளித்திட வேண்டும் என்பதை குறிப்பிட்டு தேர்தல் பிரச்சாரத்தின் போது கழகத்தின் சார்பில் மாவட்டம் தோறும் வைக்கப்பெற்ற உங்கள் தொகுதியில் முதல்வர் கோரிக்கைப் பெட்டியில் மனு சமர்ப்பித்து மிகுந்த நம்பிக்கையுடன் நல்ல செய்தியை எதிர்பார்த்துக் காத்திருந்தோம். இதற்கிடையில் இந்த மனுக்கள் குறித்து ஒருசில மாவட்டங்களில் மனுதாரர்களிடம் விசாரித்து அறிந்த துறை அதிகாரிகள் இப்பிரச்னை குறித்து, தமிழக முதல்வரும், அரசும் தான் கொள்கை அளவில் முடிவு எடுக்க முடியும் என்று சொல்லி வருவதால் இம்மனுகுறித்து இதுவரை எவ்வித சாதகமான பதிலும் வராதது மிகுந்த ஏமாற்றம் அளித்துள்ளது.

- **இதற்கிடையில் 2019-க்குப் பிறகு தற்போது 2022-ம் ஆண்டிற்கான ஆசிரியர் தகுதித் தேர்வுக்கான அறிவிப்பு வெளியாகியுள்ளது. இந்த தேர்வினை நாங்களும் எழுத வேண்டுமா என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. முறையாக 11 ஆண்டுகள் பணியாற்றி தேர்வு நிலை (Selection Grade), சிறப்பு நிலை (Special Grade), ஆகிய தகுதிகளை எட்டியிருந்தாலும், அதற்கான பணப்பலன்கள் ஏதும் இதுநாள்வரை பெற முடியாமல் இருந்து வரும் எங்களுக்கும் இவ்வாண்டில் (2022) நடைபெற உள்ள ஆசிரியர் தகுதித் தேர்வு எங்களுக்குப் பொருந்துமா, பொருந்தாதா என்ற பெரும் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளோம். எங்களின் இந்த நிலை குறித்து பல்வேறு ஆசிரியர் சங்கங்கள் தொடர்ந்து துறை சார்ந்த அதிகாரிகளிடம் விளக்கமாக எடுத்துச் சொல்லி வருகின்றனர். இருப்பினும் கல்வித்துறை அதிகாரிகள் யாரும் எங்கள் மீது இரக்கம் காட்டுவதில்லை, அரசிடமும் எங்களின் நிலை குறித்து பேசுவதில்லை என்ற தாங்க முடியாத வேதனையின் உச்சத்தில் தான் இருந்து வருகிறோம்.**

- எனவே, **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மனது வைத்தால் தகுதித் தேர்வு எழுதுவதிலிருந்து ஒரே ஒரு தவிர்ப்பு ஆணை மூலம் எங்களை விடுவித்து விட முடியும். அவ்வாறு விடுவிக்கப்பட்டால் ஆசிரியர் தகுதித் தேர்வு தொடர்பாக கடந்த ஆட்சியாளர்களால் தொடுக்கப்பட்ட அனைத்து வழக்குகளும் வாபஸாகிவிடும். அரசுக்கும் வழக்குக்காக செலவிடும் பெரிய தொகை மிச்சமாகும், கல்வித்துறை அதிகாரிகளுக்கும் வழக்கு தொடர்பான பணிச்சுமை அறவே நீங்கிடும். நாங்களும் நிம்மதியாக பணியினைத் தொடர முடியும்.** எனவே இது குறித்து நல்ல அறிவிப்பினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரைவில் வெளியிடுவார்கள் என்ற ஏக்கத்துடனும், கண்களில் பெருக்கெடுக்கும் கண்ணீருடனும் காத்திருக்கிறோம். 11 ஆண்டு கால இருள் சூழ்ந்த எங்களது வாழ்க்கை தமிழக முதல்வர் அவர்களால் தான் விடியும்... அதன் மூலம் எங்கள் பிரச்னைகள் முடியும் என உறுதியாக நம்புகிறோம்.

தொடர் காத்திருப்புடன்,
தங்கள் உண்மையுள்ள,